# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

# TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அனைத்துலகத் தேர்வு

# 2012

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 9

நேரம்: 180 மணித்துளிகள்

சுட்டெண்:

மொத்தப்புள்ளிகள் : 100

## 1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய எழுத்தின் கூட்டில் புள்ளடி இடுக.

1. தமிழில் உள்ள முதல் எழுத்துகள்

அ) 18 ஆ) 30 இ) 216 ஈ) 217

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

2. "பாரும் கிழக்கிலொரு வெள்ளி ஒளிவீசும்" என்ற தொடரில் கூறப்படும் பொழுது.

அ) அதிகாலைப்பொழுது ஆ) மாலைப்பொழுது

இ) நண்பகற் பொழுது ஈ) இராப்பொழுது

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

3. மட்டக்களப்புப் பகுதிகளில் விடியவிடியக் கூத்துகள் நடைபெறும். இதில் விடியவிடிய என்பது

அ) அடுக்குத் தொடர் ஆ) அடுக்கிடுக்குத் தொடர்

இ) இரட்டைக்கிழவி ஈ) இணைமொழி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

4. 'உண்டான்' எனும் சொல்லில் வரும் விகுதி

அ) உண் ஆ) ஆன் இ) ட் ஈ) அன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

5. இலங்கையில் மிகப்பெரிய தாழிக்காடு உள்ள இடம்

அ) புத்தளம் ஆ) திருகோணமலை இ) மன்னார் ஈ) யாழ்ப்பாணம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

6. இன்று பனிகொட்டியது. என்ற சொல்லியம்

அ) தனிச் சொல்லியம் ஆ) தொடர் ச்சொல்லியம்

இ) கலப்புச் சொல்லியம் ஈ) கூட்டுச் சொல்லியம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

7. போர்த்துக்கேயர் இலங்கைத்தீவில் காலடி வைத்தபோது அங்கு இருந்த அரசுகளின் எண்ணிக்கை

அ) நான்கு ஆ) மூன்று இ) ஐந்து ஈ) ஆறு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

8. தமிழ் மீது கொண்ட பற்றினால் தனது பெயரைத் தனிநாயகம் என மாற்றிக் கொண்டவர்

அ) சேவியர் ஆ) வரதன்

இ) சுப்புரத்தினம் ஈ) நேசன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

9. 'இலை' என்பது

அ) பொருட்பெயர் ஆ) சினைப்பெயர்

இ) குணப்பெயர் ஈ) இடப்பெயர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

10. இலங்கை அரசின் 'சிங்களம் மட்டும்' என்ற அரசமொழிச்சட்டத்தை எதிர்த்துப் போராடியவர்

அ) தனிநாயகம் அடிகள் ஆ) விபுலாநந்தர்

இ) மறைமலை அடிகள் ஈ) வீரமாமுனிவர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

11. 'மதிபோலும் முகம்' இதில் உள்ள உவமேயம்

அ) மதி ஆ) போலும் இ) முகம் ஈ) அழகு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

12. இலக்கணவகையால் தமிழ்மொழியிலுள்ள சொற்கள்

அ) ஆறுவகை ஆ) மூன்றுவகை

இ) நான்குவகை ஈ) இரண்டுவகை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

13. மணல் மீது படம் கீறுவது

அ) இறால் ஆ) மீன் இ) நண்டு ஈ) ஆமை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

14. 'புலவரும் வறுமையும்' என்ற பாடத்தில் புலவர் தூதாக அனுப்பிய பறவை

அ) அன்னம் ஆ) புறா இ) கிளி ஈ) நாரை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

15. கண்ணகி கண்ணீரும் கம்பலையுமாக அரண்மனை நோக்கி ஓடினாள். இதில் கண்ணீரும் கம்பலையும் என்பது

அ) இணைமொழித் தொடர் ஆ) அடுக்குத் தொடர்
இ) உவமைத் தொடர் ஈ) அடுக்கிடுக்குத் தொடர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

16. பின்வருவனவற்றுள் குறிப்பு வினை

அ) ஆடினான் ஆ) பொன்னன் இ) வந்த ஈ) ஓடி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

17. கற்றோர் மட்டும் பொருளறிந்து கொள்ளக்கூடிய இலக்கியச் சொல்

அ) பெயர்ச்சொல் ஆ) இயற்சொல் இ) திசைச்சொல் ஈ) திரிசொல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

18. அல்பேர்ட் சுவைட்சர் எந்த நாடடைச் சேர்ந்த அறிஞர் ?

அ) பிரான்சு ஆ) செருமனி இ) இந்தியா ஈ) இத்தாலி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

19. பூ + பொழில் என்பதைச் சேர்த்து எழுதினால்

அ) பூம்பொழில் ஆ) பூப்பொழில் இ) பூபொழில் ஈ) பூற்பொழில்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

20. சங்கிலி மன்னனைக் காட்டிக்கொடுத்தவன்

அ) எட்டப்பன் ஆ) வன்னியத்தேவன்
இ) கதிர்காமநாயகம் ஈ) துட்டகெமுனு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

21. விளிப்பொருளை உணர்த்தும் வேற்றுமை

அ) மூன்றாம் வேற்றுமை ஆ) எட்டாம் வேற்றுமை
இ) ஏழாம் வேற்றுமை ஈ) ஐந்தாம் வேற்றுமை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

22. குந்தவை மல்லிகை சூடி விழாவிற்குச் சென்றாள். இதில் இடம்பெற்றுள்ள ஆகுபெயர்

அ) பொருளாகுபெயர் ஆ) சினையாகுபெயர்
இ) தொழிலாகுபெயர் ஈ) குணவாகுபெயர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

23. ‘கோலுக்கே இந்தப் பயம் கொள்கிறாய் பிள்ளாய்’? இங்கு கோல் என்பது

அ) அம்பு ஆ) தடி இ) வில் ஈ) நாண்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

24. ‘ந்’ என்ற மெய் எழுத்தின் இன எழுத்து

அ) ப் ஆ) த் இ) ற் ஈ) ட்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

25. கலிங்கப்போரில் எண்ணற்ற உயிர்கள் அழிவடைந்ததால் போரை வெறுத்த மன்னன்

அ) கயபாகு ஆ) அசோகன் இ) விசயன் ஈ) எல்லாளன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

26. மேய்ந்தது. என்ற சொல்

அ) உயர் திணை ஆண்பால் ஆ) உயர்திணைப் பெண்பால்
இ) அஃறிணை ஒன்றன்பால் ஈ) அஃறிணைப் பலவின்பால்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

27. ‘கோவேத’ என்ற தமிழ்ப் பிராமியச் சொல்லில் ‘கோ’ என்பது குறித்து நிற்பது

அ) குடிகளை ஆ) மன்னனை
இ) மக்களை ஈ) புலவரை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

28. வயற்கரை என்ற சொல்லைப் பிரித்தால்

அ) வயல் + கரை ஆ) வயற் + கரை
இ) வய + கரை ஈ) வயல்க் +கரை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

29. கண்ணனது வீடு அழகானது. இதில் வந்துள்ள வேற்றுமை

அ) ஆறாம் வேற்றுமை ஆ) ஐந்தாம் வேற்றுமை
இ) மூன்றாம் வேற்றுமை ஈ) இரண்டாம் வேற்றுமை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

30. வாடைக்காற்று என்பது

அ) கிழக்கிலிருந்து வீசும் காற்று ஆ) வடக்கிலிருந்து வீசும் காற்று
இ) மேற்கிலிருந்து வீசும் காற்று ஈ) தெற்கிலிருந்து வீசும் காற்று

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

(புள்ளிகள் 30)

## 2) பந்தியை வாசித்து; வினாக்களுக்கு முழுவிடை தருக.

பண்டைத் தமிழகத்திலே மானமும் வீரமும் உயிரைவிட உயர்ந்ததாகக் கருதப்பட்டது. ஆண்கள் மட்டுமல்ல பெண்களும் அத்தகைய மறவுணர்வு உள்ளவர்களாகவே இருந்தனர். வண்டார்குழலி என்றொரு பெண்ணுடைய கணவன் வில்லவன் கோதை, மாற்றார் படையெடுத்து வருவது கேட்டுச் சினந்து போருக்குப் புறப்பட்டான். அவனுடன் அவனது மகனும் போருக்குப் புறப்பட்டான். தாய் அவனைக் கட்டியணைத்து, "என் மகனே! நாட்டைக் காக்க நீயும் போருக்குப் போவதுதான் பெருமையடா! நீ பெரியவன் ஆனதும் போருக்குப் போகலாம். உன் தந்தை வென்று வரட்டும் வா!" என்றாள். வில்லவன் கோதை மாற்றார் படைகளைக் கண்டதுண்டமாக்கிக் கடும்போர் புரிந்தான். பின்னர் மார்பில் வேல்தாங்கி வீரமரணம் அடைந்தான்.

அதையறிந்த வண்டார்குழலி தன் மகனை அழைத்தாள். மகனே! உன் தந்தை நாட்டிற்காக வீரமரணம் அடைந்துவிட்டார் . இன்னும் போர் முரசு ஒலிக்கிறது. நீ போருக்குச் சென்று தமிழரின் வீரத்தை மாற்றாருக்குக் காட்டு என்று கூறினாள். மகனுக்கு வட்டுடை அணிவித்து, வாளைக் கையிற்கொடுத்து போய் வா மகனே! வென்று வா மகனே! என்று கூறிப் போருக்கு அனுப்பி வைத்தாள். தன் மகன் போர்க்களத்திலே பகைப்படையைக் கொன்றொழித்துக் கடும்போர் புரிவதாகக் கேள்வியுற்றாள். உடனே போர்க்களம் நோக்கி ஓடிச்சென்றாள். அங்கு அவளது மகன் விழுப்புண் பட்டதையறிந்து பிணங்களிடையே மகனைத் தேடினாள். "மகனே! நீ எங்கே?" எனக் கூவினாள். "வாழ்கிறேன் அம்மா வீரனாக! வெற்றி நமக்கே!" என்று மகனின் குரல் கேட்டது. குரல் கேட்ட திசையை நோக்கி ஓடினாள். மகனே! என்று கட்டியணைத்து, தனது மகனின் வீரத்தை எண்ணி மகிழ்ந்தாள்.

1. பண்டைத் தமிழகத்திலே எவை உயிரைவிட மேலானதாகக் கருதப்பட்டன?

______________________________

______________________________

2. வில்லவன் கோதை போர்க்களத்திலே எவ்வாறு போர் புரிந்தான்?

______________________________

______________________________

3. கணவன் வீரச்சாவடைந்ததும் வண்டார்குழலி தன் மகனுக்கு என்ன கூறினாள்?

______________________________

______________________________

4. வண்டார்குழலி தன் மகனை எவ்வாறு போருக்கு அனுப்பிவைத்தாள்?

5. போர்க்களத்திற்குச் சென்ற வண்டார்குழலிக்கு அவளது மகன் கூறியவை யாவை?

(புள்ளிகள் 10)

## 3) பாடநூல் வினா- ஏழில் ஐந்திற்கு விடை தருக.

1. திருக்குறள் பற்றிப் புலவர்கள் புகழ்ந்து போற்றிய புகழ்மாலை எவ்வாறு அழைக்கப்படுகின்றது?

2. தனிநாயகம் அடிகளார் செய்த தமிழ்த் தொண்டுகள் இரண்டு கூறுக?

3. 'மீண்டும் தொடங்கும் மிடுக்கு' என்ற பாடலில் கவிஞர் ஏன் விளைநிலத்தைப் பாறை என்கிறார் ?

4. மகாவம்சம் ஒரு கட்டுக்கதை என்பதை விளக்கும் இரண்டு சான்றுகள் தருக.

5. போர்த்துக்கேயர் இலங்கைக்கு வந்தபோது அங்கு இருந்த அரசுகள் எவை?

6. 'புலவரும் வறுமையும்' என்ற பாடத்தில் புலவரின் பாடலைக் கேட்ட பாண்டியன் புலவருக்குப் பரிசாக எவற்றைக் கொடுத்தான்?

7. இலங்கையின் ஆதிக்குடிகள் தமிழர் என்பதனை உறுதிப்படுத்தும் சான்று ஒன்று தருக.

(புள்ளிகள் 10)

## 4) பாடல் வினாக்களுக்கு முழுவிடை தருக.

நடை தெரியாத இளமையிலே - நான்
தமிழ்மண் அளைந்து தவழ்ந்தெழுந்தேன்
நடக்க எழுந்த அகவைமுதல் - நான்
தமிழ்மண் நடையே நடக்கிறேன்.

நினைக்கத் தெரிந்த காலம் முதல் - நான்
நிகரில் தமிழ்மண்ணே நினைக்கிறேன்
நினைத்து நினைத்து நெஞ்சத்தில் - நான்
தேனார் தமிழீழம் படைக்கிறேன்

பாடத் தெரிந்த நாள் முதலாய் - நான்
பாடிப் புகழ்ந்த தமிழ்மண்ணை
நாடிக் கிடக்கும் வாழ்வல்லால் - ஒரு
தனிவாழ்வு எனக்கென்று இருக்காது.

1. கவிஞர் நினைக்கத் தெரிந் காலம் முதல் எதை நினைக்கின்றார் ?

_______________________________________________

_______________________________________________

2. எப்போதிருந்து கவிஞர் தமிழ்மண் நடை நடக்கின்றார் ?

_______________________________________________

_______________________________________________

3. நடைதெரியாத இளமையிலே இக்கவிஞர் செய்தது என்ன?

_______________________________________________

_______________________________________________

4. எதைப் பாடிப் புகழ்ந்ததாகக் கவிஞர் கூறுகின்றார்?

_______________________________________________

_______________________________________________

5. எத்தகைய வாழ்வு தனக்கு இருக்காது எனக் கவிஞர் கூறுகின்றார்.

_______________________________________________

_______________________________________________

(புள்ளிகள் 10)

## 5) இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.

1. பின்வரும் வினைமுற்றுகளில் இடம் பெற்றுள்ள பகுதி, இடைநிலை, விகுதி என்பவற்றைத் தருக.

| *வினைமுற்று* | *பகுதி* | *இடைநிலை* | *விகுதி* |
|---|---|---|---|
| செய்தான் | | | |
| கண்டான் | | | |

2. உரிச்சொற்கள் இடம் பெறுமாறு இரண்டு சொல்லியங்கள் தருக?

______________________________

______________________________

3. உயிர் நெடில் எழுத்துகள் எத்தனை? அவை எவை?

______________________________

______________________________

______________________________

4. தரப்பட்டுள்ள சொற்றொடர்கள் இடம்பெறச் சொல்லியங்கள் எழுதுக.

அல்லும் பகலும்: ______________________________

______________________________

கையும் மெய்யும்: ______________________________

______________________________

பழக்க வழக்கம்: ______________________________

______________________________

5. பின்வரும் சொற்களின் புணர்ச்சி வகைகளைத் தருக.

அ) கத்தரிக்காய் ____________________

ஆ) காற்சட்டை ____________________

இ) நீலவானம் ____________________

(புள்ளிகள் 15)

6. பந்தியைத் தமிழ்மொழியில் மாற்றி எழுதுக.

Our home garden is useful. We can grow whatever vegetables we need in our home garden. We can use them in our cooking. We can save the money in buying vegetables and spend it for other necessities. Gardening is a hobby. It gives us happiness. So we must make the most of our garden.

Onze tuin is nuttig. Wij kunnen groenten planten die we nodig hebben. We kunnen ze gebruiken voor het koken. We kunnen het geld dat we besteden aan groente besparen en aan iets anders besteden wat we nodig hebben. Tuinieren is een leuke bezigheid. Dat geeft je een tevreden gevoel. Daarom moeten wij goed gebruik maken van onze tuin.

Kjøkkenhagen er nyttig. I vår hage kan vi plante de grønnsakene som vi trenger. Vi kan bruke de til matlaging hos oss. Ved å gjøre dette kan vi spare de pengene som brukes til grønnsaker og bruke det til andre behov. Kjøkkenhagener en hobby og det gir glede. Vi må nyttggjøre oss av kjøkkenhagen.

Unser Garten ist uns sehr nützlich. Die benötigten Gemüse können wir uns selber anpflanzen. Dadurch sparen wir das Geld an Gemüse und können es somit auch für andere Dinge ausgeben. Darüber hinaus ist ein Hobby. Ein Hobby was uns sehr glücklich macht. Deshalb sollten wir den Garten auch gutausnutzen.

Vores (hjemme) have er brugbar. Vi kan dyrke de nødvendige grønsager i vores have. Disse (kan) bruges til vores madlavning. De penge vi spar på grønsager, bruges på andre (nødvendige) ting. (At) Dyrke have er fritid. Den giver også glad. Derfor gøre vi havet godt brugbar.

Il nostro orto è utile. Noi possiamo coltivare le verdure che ci servono. E le possiamo usare per cucinarle. Noi cosi possiamo risparmiare i soldi per comprare le verdure e utilizzare quel denaro per altro.Curare l'orto è un passa tempo. Ti da gioia. Quindi ne dobbiamo fare buon uso.

Nous avons un jardin où nous pouvons cultiver des légumes qui peuvent nous sembler nécessaire. Evidemment, nous pouvons en profiter pour les cuisiner. Grâce à cela, nous pouvons économiser l'argent pour dépenser autrement que d'acheter les légumes. Ceci nous ramène la joie. Par conséquent, nous devons garder en bon état.

(புள்ளிகள் 05)

Vår trädgård är väldigt användbar. Vi kan odla de grönsaker som vi behöver vid matlagning. Kostnaden för grönsaker kan vi spara och köpa något annat viktigt, odling är en hobby och ger en mycket glädje. Därför gör vi odlingen bra.

**7) கீழுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து 200 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- இலங்கையின் தொல்குடிகள்
- புலவரும் வறுமையும்
- நாமும் வாழிடப் பள்ளியும்

(புள்ளிகள் 20)